முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 22.10.2025
O.S. 266/2014
பி.வா..சா. 3 இம்மானுவேல்

முதல் விசாரணை

நான் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. 26.03.2025 ல் இருந்து நாகர்கோவில் தீயணைப்பு மற்றும் மீட்பு நிலையத்தில் உதவி மாவட்ட அலுவராக பணிபுரிந்து வருகிறேன். கலையரங்கம், திரையரங்கம், meeting hall, திருமண மண்டபம் போன்ற பொதுமக்கள் கூடும் இடங்களுக்கு தீயணைப்பு சான்றிதழ் கட்டாயம் வாங்க வேண்டும் என்றால் சரி. அதற்கான விண்ணப்பத்தினை மாவட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பத்திற்கு பிறகு நான் நேரில் சென்று இடத்தை பார்வையிட்டு அறிக்கையை மாவட்ட அலுவலருக்கு சமர்பிப்பேன். கோட்டார் வசந்தா திருமண மண்டபத்திற்கு தீயணைப்பு சான்றிதழ் கேட்டு மனு எதுவும் எனது விசராணைக்காக வந்ததா என்றால் என்னுடைய பணி காலத்தில் இல்லை, அதற்கு முன்பு ஆவணங்களை பார்த்தபோது 2015 ல் 12.01.2015 மனு கொடுத்துள்ளார்கள். 04.02.2015 அன்று ஆய்வு செய்து அறிக்கை மாவட்ட அலுவலருக்கு சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி விவரம் தடையில்லா சான்று பதிவேட்டில் உள்ளது. அதற்கான நகலை உண்மை நகலை சா. சா. ஆவணம் 1 தாக்கல் செய்கிறேன்.

நாளது தேதிவரை வசந்தா திருமண மண்டபவத்தில் தீ உரிமம் ஏற்பட்டதா என்றால் என்னிடம் அதற்கான ஆவணம் இல்லை.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

தீயணைப்பு துறைக்கு விண்ணப்பத்தினை யார் பெயரில் கொடுக்கப்பட்டது என்ற விவரம் என்னிடம் இல்லை. 12.01.2015 ல் தடையில்லா சான்று கொடுத்துள்ளேன் என்றால் இல்லை கொடுக்க பரிந்துரை மட்டுமே செய்யப்பட்டது.